செ.வெ.எண்: 11 நாள்: 15.05.2021

**விழுப்புரம் மாவடத்திற்குட்பட்ட விழுப்புரம் நகராட்சி, முகையூர், கண்டாச்சிபுரம் மற்றும் திருக்கோவிலூர் ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக ரூ.2000/-த்தினை குடும்ப அட்டைதாரர்களுக்கு மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் வழங்கினார்.**

விழுப்புரம் மாவடத்திற்குட்பட்ட விழுப்புரம் நகராட்சி, முகையூர், கண்டாச்சிபுரம் மற்றும் திருக்கோவிலூர் ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக ரூ.2000/-த்தினை குடும்ப அட்டைதாரர்களுக்கு மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் இன்று (15.05.2021) வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் கொரோனா பரவலைத் தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள சில தவிர்க்க இயலாத கட்டுப்பாடுகளால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பாதுகாத்து ஆறுதல் அளிக்கும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.4000/- வழங்கப்படும் என தெரிவித்தார். அதன்படி முதற்கட்டமாக 2,07,66,950 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,153 கோடி மதிப்பீட்டில் ரூ.2000/- நிவாரண தொகை முதல் தவணையாக மே மாதத்திலேயே வழங்கும் திட்டத்தில் கையெழுத்திட்டார்.

அதனைத்தொடர்ந்து தலைமைச்செயலகத்தில் (10.05.2021) அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோனா நிவாரண தொகை முதல் தவணையாக ரூ.2000/-த்தினை 7 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட நியாயவிலைக்கடை எண் 7, முகையூர் நியாயவிலை கடை எண்.1, கண்டாச்சிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நியாய விலைக்கடை மற்றும் திருக்கோவிலூர் நியாய விலைக்கடை எண்.3 ஆகிய பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக ரூ.2000/- வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1254 நியாயவிலைக் கடைகள் 5,95,269 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் 1227 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுத்துறை மூலமும், 27 நியாயவிலைக் கடைகள் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலமும் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 1009 முழு நேர நியாயவிலைக் கடைகளும். 245 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் அடங்கும்.

இந்நியாயவிலைக் கடைகள் மூலம் 5,87,754 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகிறார்கள். இதில் 5.11.454 அரிசி அட்டைகள், 68.107 அந்தியோதையா அன்ன யோஜனா, 1299 காவலர் குடும்ப அட்டைகள் மற்றும் 415 இலங்கை தமிழர்கள் குடும்ப அட்டைகள் உள்ளன.

இத்திட்டத்தின்கீழ், விழுப்புரம் வட்டத்தில் ரூ.24,14,20,000 மதிப்பீட்டில் 1,20,710 குடும்ப அட்டைதாரர்களுக்கும், விக்கிரவாண்டி வட்டத்தில் ரூ.15,69,66,000 மதிப்பீட்டில் 78,483 குடும்ப அட்டைதாரர்களுக்கும், வானூர் வட்டத்தில் ரூ.9,95,50,000 மதிப்பீட்டில் 49,775 குடும்ப அட்டைதாரர்களுக்கும், கண்டாச்சிபுரம் வட்டத்தில் ரூ.8,27,48,000 மதிப்பீட்டில் 41,374 குடும்ப அட்டைதாரர்களுக்கும், திருவெண்ணெய்நல்லூர் வட்டத்தில் ரூ.8,35,80,000 மதிப்பீட்டில் 41,790 குடும்ப அட்டைதாரர்களுக்கும், திண்டிவனம் வட்டத்தில் ரூ.18,87,18,000 மதிப்பீட்டில் 94,359 குடும்ப அட்டைதாரர்களுக்கும், மரக்காணம் வட்டத்தில் ரூ.6,80,32,000 மதிப்பீட்டில் 34,016 குடும்ப அட்டைதாரர்களுக்கும், செஞ்சி வட்டத்தில் ரூ.17,40,56,000 மதிப்பீட்டில் 87,028 குடும்ப அட்டைதாரர்களுக்கும், மேல்மலையனூர் வட்டத்தில் ரூ.8,12,68,000 மதிப்பீட்டில் 40,634 குடும்ப அட்டைதாரர்கள் என மொத்தம் ரூ.117,63,38,000 மதிப்பீட்டில் 5,88,169 குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா வைரஸ் நிவாரண நிதி ரூ.2,000/- வீதம் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., கூட்டுறவு இணைபதிவாளர் திரு.பிரபாகரன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), திரு.நா.புகழேந்தி (விக்கிரவாண்டி) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.

செ.வெ.எண்: 12 நாள்: 15.05.2021

**விழுப்புரம் மாவடத்திற்குட்பட்ட செஞ்சி, வல்லம் மற்றும் திண்டிவனம் ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக ரூ.2000/-த்தினை குடும்ப அட்டைதாரர்களுக்கு மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் வழங்கினார்.**

விழுப்புரம் மாவடத்திற்குட்பட்ட செஞ்சி, வல்லம் மற்றும் திண்டிவனம் ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக ரூ.2000/-த்தினை குடும்ப அட்டைதாரர்களுக்கு மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் கொரோனா பரவலைத் தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள சில தவிர்க்க இயலாத கட்டுப்பாடுகளால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பாதுகாத்து ஆறுதல் அளிக்கும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.4000/- வழங்கப்படும் என தெரிவித்தார். அதன்படி முதற்கட்டமாக 2,07,66,950 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,153 கோடி மதிப்பீட்டில் ரூ.2000/- நிவாரண தொகை முதல் தவணையாக மே மாதத்திலேயே வழங்கும் திட்டத்தில் கையெழுத்திட்டார்.

அதனைத்தொடர்ந்து தலைமைச்செயலகத்தில் (10.05.2021) அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோன நிவாரண தொகை முதல் தவணையாக ரூ.2000/-த்தினை 7 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரண தொகை வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நியாயவிலைக்கடை எண்.1, கொங்கராம்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் வல்வம் நியாய விலைகடை மற்றும் விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை திண்டிவனம் நியாய விலை கடை எண்.4 ஆகிய பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை முதல் தவணையாக ரூ.2000/- வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1254 நியாயவிலைக் கடைகள் 5,95,269 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் 1227 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுத்துறை மூலமும், 27 நியாயவிலைக் கடைகள் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலமும் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 1009 முழு நேர நியாயவிலைக் கடைகளும். 245 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் அடங்கும்.

இந்நியாயவிலைக் கடைகள் மூலம் 5,87,754 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகிறார்கள். இதில் 5.11.454 அரிசி அட்டைகள். 68.107 அந்தியோதையா அன்ன யோஜனா, 1299 காவலர் குடும்ப அட்டைகள் மற்றும் 415 இலங்கை தமிழர்கள் குடும்ப அட்டைகள் உள்ளன.

இத்திட்டத்தின்கீழ், விழுப்புரம் வட்டத்தில் ரூ.24,14,20,000 மதிப்பீட்டில் 1,20,710 குடும்ப அட்டைதாரர்களுக்கும், விக்கிரவாண்டி வட்டத்தில் ரூ.15,69,66,000 மதிப்பீட்டில் 78,483 குடும்ப அட்டைதாரர்களுக்கும், வானூர் வட்டத்தில் ரூ.9,95,50,000 மதிப்பீட்டில் 49,775 குடும்ப அட்டைதாரர்களுக்கும், கண்டாச்சிபுரம் வட்டத்தில் ரூ.8,27,48,000 மதிப்பீட்டில் 41,374 குடும்ப அட்டைதாரர்களுக்கும், திருவெண்ணெய்நல்லூர் வட்டத்தில் ரூ.8,35,80,000 மதிப்பீட்டில் 41,790 குடும்ப அட்டைதாரர்களுக்கும், திண்டிவனம் வட்டத்தில் ரூ.18,87,18,000 மதிப்பீட்டில் 94,359 குடும்ப அட்டைதாரர்களுக்கும், மரக்காணம் வட்டத்தில் ரூ.6,80,32,000 மதிப்பீட்டில் 34,016 குடும்ப அட்டைதாரர்களுக்கும், செஞ்சி வட்டத்தில் ரூ.17,40,56,000 மதிப்பீட்டில் 87,028 குடும்ப அட்டைதாரர்களுக்கும், மேல்மலையனூர் வட்டத்தில் ரூ.8,12,68,000 மதிப்பீட்டில் 40,634 குடும்ப அட்டைதாரர்கள் என மொத்தம் ரூ.117,63,38,000 மதிப்பீட்டில் 5,88,169 குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா வைரஸ் நிவாரண நிதி ரூ.2,000/- வீதம் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., கூட்டுறவுத்துறை இணைபதிவாளர் திரு.பிரபாகரன், மயிலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ச.சிவக்குமார், திண்டிவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சீத்தாபதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.